பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
மூன்றாம் பத்து

மூன்றாம் திருமொழி - சீலைக் குதம்பை
கண்ணன் கன்றுகள் மேய்த்து வரக் கண்டு யசோதை மகிழ்தல்

** சீலைக் குதம்பை ஒரு காது ஒரு காது *
செந்நிற மேல் தோன்றிப் பூ *
கோலப் பணைக் கச்சும் கூறை உடையும் *
குளிர் முத்தின் கோடாலமும் **
காலிப் பின்னே வருகின்ற * கடல்வண்ணன்
வேடத்தை வந்து காணீர் *
ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் *
நங்கைமீர்! நானே மற்றாரும் இல்லை 1

கன்னி நன்மாமதிள் சூழ் தரு *
பூம்பொழில் காவிரித் தென்னரங்கம் *
மன்னிய சீர் மதுசூதனா! கேசவா! *
பாவியேன் வாழ்வுகந்து **
உன்னை இளங்கன்று மேய்க்கச் *
சிறுகாலே ஊட்டி ஒருப்படுத்தேன் *
என்னின் மனம் வலியாள் ஒரு பெண் இல்லை *
என் குட்டனே முத்தம் தா 2

காடுகள் ஊடு போய்க் * கன்றுகள் மேய்த்து
மறியோடி * கார்க்கோடல் பூச்
சூடி வருகின்ற தாமோதரா! * கற்றுத்
தூளி காண் உன்னுடம்பு **
பேடை மயில் சாயல் பின்னை மணாளா! *
நீராட்டமைத்து வைத்தேன் *
ஆடி அமுது செய் அப்பனும் உண்டிலன் *
உன்னோடு உடனே உண்பான் 3

** கடியார் பொழில் அணி வேங்கடவா! *
கரும் போரேறே! * நீ உகக்கும்
குடையும் செருப்பும் குழலும் தருவிக்கக் *
கொள்ளாதே போனாய் மாலே! **
கடிய வெங்கான் இடைக் கன்றின் பின்
போன * சிறுக் குட்டச் செங்கமல
அடியும் வெதும்பி * உன் கண்கள் சிவந்தாய்
அசைந்திட்டாய் * நீ எம்பிரான்! 4

பற்றார் நடுங்க முன் பாஞ்சசன்னியத்தை *
வாய் வைத்த போரேறே! *
என் சிற்றாயர் சிங்கமே! சீதை மணாளா! *
சிறுக்குட்டச் செங்கண் மாலே! **
சிற்றாடையும் சிறுப் பத்திரமும் * இவை
கட்டிலின் மேல் வைத்துப் போய் *
கற்றாயரோடு நீ கன்றுகள் மேய்த்துக் *
கலந்துடன் வந்தாய் போலும் 5

அஞ்சுடர் ஆழி உன் கையகத்தேந்தும் *
அழகா! நீ பொய்கை புக்கு *
நஞ்சுமிழ் நாகத்தினோடு பிணங்கவும் *
நான் உயிர் வாழ்ந்திருந்தேன் **
என் செய்ய என்னை வயிறு மறுக்கினாய்? *
ஏதும் ஓர் அச்சம் இல்லை *
கஞ்சன் மனத்துக்கு உகப்பனவே செய்தாய் *
காயாம் பூ வண்ணம் கொண்டாய்! 6

பன்றியும் ஆமையும் மீனமும் ஆகிய *
பாற்கடல் வண்ணா! உன் மேல் *
கன்றின் உருவாகி மேய் புலத்தே வந்த *
கள்ள அசுரர் தன்னை **
சென்று பிடித்துச் சிறுக்கைகளாலே *
விளங்காய் எறிந்தாய் போலும் *
என்றும் என் பிள்ளைக்குத் தீமைகள்
செய்வார்கள் * அங்ஙனம் ஆவர்களே 7

கேட்டறியாதன கேட்கின்றேன் *
கேசவா! கோவலர் இந்திரற்கு *
காட்டிய சோறும் கறியும் தயிரும் *
கலந்துடன் உண்டாய் போலும் **
ஊட்ட முதலிலேன் உன்தன்னைக்
கொண்டு * ஒரு போதும் எனக்கரிது *
வாட்டமிலாப் புகழ் வாசுதேவா! * உன்னை
அஞ்சுவன் இன்று தொட்டும் 8

திண்ணார் வெண்சங்குடையாய்! * திருநாள்
திருவோணம் இன்றேழு நாள் * முன்
பண்ணேர் மொழியாரைக் கூவி முளை அட்டிப் *
பல்லாண்டு கூறுவித்தேன் **
கண்ணாலம் செய்யக் * கறியும்
கலத்ததரிசியும் ஆக்கி வைத்தேன் *
கண்ணா! நீ நாளைத் தொட்டுக் கன்றின் பின்
போகேல் * கோலம் செய்து இங்கே இரு 9

** புற்றரவல்குல் அசோதை நல்லாய்ச்சி *
தன் புத்திரன் கோவிந்தனை *
கற்றினம் மேய்த்து வரக் கண்டுகந்து *
அவள் கற்பித்த மாற்றம் எல்லாம் **
செற்றம் இலாதவர் வாழ்தரு *
தென்புதுவை விட்டுசித்தன் சொல் *
கற்றிவை பாட வல்லார் * கடல்வண்ணன்
கழல் இணை காண்பர்களே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்